**ARTICLE 24 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00029**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 135–141
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும்

**சுபா பா[1,*], முனைவர் . ஜென்ஸிஸ் குமார் மி[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம்.695034., India

[2]இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம்.695034., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** சுபா பா — subhapauldurai8@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பரதவர் சமூகத்தில் பொருளாதார அதிகாரத்தின் அடிப்படையில் உருவான சமூக படிநிலைகளையும் உட்சாதிப் பிரிவுகளுக்கு இடையேயான முரண்பாடுகளையும் ஆராய்கிறது. இவ்வாய்வில் மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள், கம்மரக்காரர்கள் ஆகிய பிரிவுகளின் சமூக மற்றும் பொருளாதார நிலைகள் ஆராயப்படுகின்றன. குறிப்பாக ஜோ டி குரூஸ் அவர்களின் ‘ கொற்கை’ நாவலை முதன்மைத் தரவாகக் கொண்டு பரதவர் சமூகத்தில் பொருளாதார அதிகாரம் மற்றும் உட்சாதிப் படிநிலை எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது ஆராயப்படுகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** பரதவர் சமூகம்; பொருளாதார அதிகாரம்; உட்சாதி முரண்பாடு; மெனக்கெடார்; கொற்கை.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பா, சு., & மி, மு. . ஜெ. கு. (2026). கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

சமூக அமைப்பு உருவாக்கத்தை, மார்க்சியம் மேற்தளம்(சாதி, பண்பாடு,கல்வி,மதம்,அரசியல்,கலை,குடும்பம், திருமணவுறவு முறை) மற்றும் அடித்தளம்(பொருளாதாரம்) என வகைப்படுத்துகிறது. இவ்விருத்தளங்களும் தனித்தனியாக இயங்குபவையன்று. ஒன்றையொன்றுச் சார்ந்தும் ஊடாடியும் செயல்படக்கூடியவை எனக் கருதப்படுகின்றன.அத்தகைய நிலையில் மேற்தளத்தில் இடம்பெறும் சாதிய அமைப்பானது மதம், அரசியல், பண்பாடு, திருமணவுறவு முதலியவற்றோடு ஊடாடுவதுப் போன்று அடித்தளத்தில் உள்ள பொருளாதாரம் மற்றும் உற்பத்தி உறவுகளுடனும் இயைபுக்கொண்டு தனது விரிவையும் பரப்பையும் விசாலப்படுத்தியுள்ளது.

இதன் பொருட்டு ஏழும் பல்வேறு சிக்கல்களில் ஒன்றாக பொருளாதார அடிப்படையில் ஒரே சாதி பிரிவிற்குள் உருவாகும் வர்க்க வேறுபாடுகள் பின்னாளில் படிநிலை, ஒடுக்குமுறை முதலிய சாதியக் கருத்தியல்களோடு இணைந்து ஒரே சாதியினுள் செயல்படும் உட்சாதிப் பிரிவுகளாக உருப்பெறும் நிலையே இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோளாகச் சுட்டலாம். இச்சிக்கலை இனம் காட்டும் முகமாக ஜோ டி குரூஸ் அவர்களால் எழுதப்பட்ட கொற்கை எனும் நாவலில் இடம்பெறும் பரதவர் சமூகத்தினிடையே காணப்படும் உட்சாதிப் பிரிவுகளின் வேறுபாடுகளையும்

முரண்பாடுகளையும் அதிகார உறவுகளின் பின்னணியில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பரதவர் சமூகத்தின் பொருளாதார அடித்தளமும் உட்சாதிப் படிநிலை உருவாக்கமும்

நெய்தல் திணை மக்களான பரதவர்களின் வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்திக் களமும் கடலே ஆகும். அம்மக்களின் அடிப்படைத் தொழில்கள் மீன் பிடித்தல், சரக்குத் தோணிகளைக் கடலில் இயக்குதல், உப்பு விளைவித்தல், சங்கு மற்றும் முத்துக்குளித்தல் ஆகியவையாகும். மீன் விற்பனையின் மூலம் சந்தைப்படுத்துதலும் அதன் வழியாக வணிகமும் நடைபெற்று வந்தன. இதன் பொருட்டே “பண்டையச் சமூகத்தில் நெய்தல் திணையில் மட்டுமே கடற்பயணம், பண்டமாற்றம், சங்கு, முத்து, உப்பு முதலிய பொருட்களின் உற்பத்தியின் மூலம் வளமான விரிவான பொருளாதார ஏற்பட்டது என்கிறார் பக்தவத்சல பாரதி(அய்யாயிரம் ஆண்டுத் தமிழகம் பண்பாட்டு மானுடவியல் பார்வை;2025)

இவ்வாறு கடலை மையமாகக் கொண்ட உற்பத்தியும் வணிகமும் பரதவர் சமூகத்தின் அடித்தளமாக அமைந்த நிலையில் இவ்வுற்பத்தி சாதனங்களின் மீதான கட்டுப்பாடு தெற்கே ஆண்ட பல பேரரசுகளின் அதிகாரத்தின் கீழ் இருந்தன. இவர்களன்றி, “தமிழகத்தின் முத்துக் குளித்துறை என்று அழைக்கப்பட்ட ஏழு கடற்துறை ஊர்கள் கி.பி 8ம் நூற்றாண்டில் தமிழகம் புகுந்த அரேபியர்கள், அஞ்சு வண்ணம் எனும் வணிகக் குழுவின் மூலம் வணிக உறவுகளை வலுப்படுத்தியதோடு படிப்படியாக வளர்ந்து பரதவர்களின் கடல் வணிகப் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியதுடன், சங்கு எடுத்தல் மற்றும் முத்துக் குளித்தல் ஆகியவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இதனால் பரதவர்கள் ஒடுக்கப்பட்டு அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டன”(ச.டெக்லா;2012).

இப்பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுபடவும் தங்களது உரிமைகளைத் திரும்பப் பெறவும் விரும்பிய பரதவர்கள் 1498 ஆம் ஆண்டு அரேபியர்களைப் போன்று வணிகத்தின் பொருட்டு தமிழகம் வந்த மற்றொரு அந்நிய நாட்டவரான போர்ச்சுகீசியர்களிடம் உதவிக் கோரினர் . மதம் மாறினால் உதவுவதாக அவர்கள் கூறியதால் கி.பி 1536 ஆம் ஆண்டு பரதவர்கள் பெரும் குழுமமாக மதம் மாறினர்.

ஆனால் முன்னவர்களைப் போலவே “போர்ச்சுக்கீசியர்களும் தங்கள் நாட்டின் நலன் கருதியே செயல்பட்டனர். முத்துக்குளித்தலில் கிடைக்கும் வருவாயில் நாலில் ஒரு பங்கு போர்ச்சுக்கீசிய மன்னருக்கும் மற்றொரு பங்கு தூத்துக்குடியில் இருந்த போர்ச்சுக்கல் கேட்டனுக்கும் படை வீரர்களுக்கும் சென்றது. மீதமுள்ள ஒரு பங்கு மட்டுமே உழைக்கும் மக்களான பரதவர்களுக்குக் கிடைத்தது. மேலும் முத்துக்குளித்தலுக்கான உரிமையை வரையறுக்கப்பட்ட தொகைக்குப் பெரும் வணிகர்களுக்கும் பணக்காரர்களுக்கும் விற்றனர்”(ஆ. சிவசுப்பிரமணியன்; 2023). மேற்கூறிய வணிகர்களும் செல்வந்தர்களும் வெளிப்புற அதிகாரக் குழுவினராக அல்லாமல் பரவர்களுக்குள்ளயே இருந்தனர். பொருளாதார வளர்ச்சியும், இவர்களுக்கு அனுகூலமாக அமைந்த போர்ச்சுக்கீசியர்களின் செயல்பாடும் இவர்களை மேலும் வளம் படைத்தவர்களாக ஆக்கின. இதன் விளைவாகப்

பொருளாதார அதிகாரத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் பரதவர் சமூகத்திற்குள்ளேயே சமூக வேறுபாடுகளை உருவாக்கி மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள், கம்மாரக்காரர்கள் எனும் உட்சாதிப் பிரிவுகளின் உருவாக்கத்திற்கும் அவற்றுக்கிடையேயான முரண்பாடுகள் வலுப்பெறுவதற்கும் காரணமாக அமைந்தன.

## கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும்

மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியை கூர்ந்து நோக்கின், பொருளாதார வளங்களின் மீதான மேலாண்மை பரதவர் சமூகத்தில் படிநிலையை உருவாக்கியுள்ளமை தெளிவு. அப்பிரிவுகளில் மேசைக்காரர்கள் குறித்த ஆய்வுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகளில் மேசைக்காரர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கு அடுத்து பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்தவர்களாக மெனக்கெடார்கள் என்னும் கூட்டம் உருவாகின்றனர். இவர்களைப் பற்றிய தனித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேசைக்காரர்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகளிலும் மெனக்கெடார்களின் சமூக தகுதி குறித்தோ அவர்கள் எவ்வாறு பொருளாதார வளங்களைக் கட்டுப்படுத்தி ஆதிக்கச் சக்திகளாக உருவெடுத்தனர் என்பது குறித்தோ விரிவான குறிப்புகள் இடம் பெறவில்லை.ஆனால் கொற்கை நாவலின் கதை நகர்வின் ஊடாக இவர்களின் வளர்ச்சி நிலைகளும், ஏனைய இரு பிரிவினருடன் எழும் முரண்பாடுகளும் பதிவாகியுள்ளன. இத்தரவுகளை ஆராய்வதற்கு முன் ‘மெனக்கெடார்’ என்ற பெயர் காரணத்தை புரிந்து கொள்வது அவசியம்.

ஜோ டி குரூஸ் அவர்கள் கொற்கை நாவலுக்கு முன் 2004 இல் எழுதிய ஆழி சூழ் உலகு என்னும் நாவலின் இறுதி பகுதியான வட்டார அகராதியில் ‘மெனக்கெடன்’ என்னும் சொல்லுக்கு “கடல் தொழில் செய்யாமல் இருப்பது” எனப் பொருள் கூறுகிறார். அதாவது கடல் தொழிலுக்குச் செல்லாமல் இருக்கும் விடுமுறை நாளை மெனக்கெடன் என வழங்கும் பழக்கம் பரதவர்களிடையே இருந்து வந்துள்ளது. அதோடு இவர்களில் யாராவது இறந்தாலும் அன்று விடுமுறை அறிவிக்கப்பட்டு கடல் தொழிலுக்குச் செல்வதில்லை. இந்நாவலில் ஊமையன் எனும் கதாபாத்திரம் இறந்து போக ஊர் முழுவதற்கும் மெனக்கெடன் அறிவிக்கப்படுகிறது.” நாள மெனக்கெடன்னு ஊர் புதா தம்புறு அடிச்சிச் சொல்லிரு”(ஆழி சூழ் உலகு; 2004,271)

இதன் அடிப்படையில் நோக்கும்பொழுது ஆரம்பத்தில் கம்மரக்காரர்களாக கடலில் தொழில் புரிந்தவர்கள் புதிய தொழில்நுட்பத்தின் பொருட்டும் கல்வி வளர்ச்சியின் காரணமாகவும் கப்பல்களில் முகவர்களாகவும் வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரசு பணிகளிலும் இடம்பெற்றுள்ளனர். இதனால் இவர்கள் கடல் தொழில்களிலிருந்து தங்களை முழுமையாக துண்டித்துக் கொண்டுள்ளனர். இங்கனம் கம்மரக்காரர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக “மெனக்கெடார்கள்” எனும் பெயர் இவர்களாலோ அல்லது பிற பரதவர்களாலோ இடப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுள்ளது. எவ்வாறு வெள்ளையர்களைப் போன்று உணவருந்த மேசையைப் பயன்படுத்தியதால் மேசைக்காரர்கள் எனப் பிறரால் அழைக்கப்பட்டு அதுவே பின்னர் அவர்களுக்கான சமூக அடையாளமாக

உருவானதோ, அதைப் போன்று இப்பெயரும் இவர்களுக்கான சமூக அடையாளமாக மாறியிருக்கலாம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கொற்கை நாவலின் வட்டாரச் சொற்கள் -அகராதியில் ' மெனக்கெடார்' என்ற சொல்லுக்கு "பரதவர்களில் படித்து வேலையிலிருப்பவர்கள் திடீர் பணக்காரர்கள்" எனப் பொருள் கூறப்படுகிறது. அடித்தள மக்கள் வரலாறு என்னும் நூலிலும் "தொழில்நுட்பம் கல்வி இதன் விளைவாக கம்மாரக்காரர்களில் ஒரு பிரிவினர் கல்வியறிவு பெற்ற மத்தியதர வர்க்கமாகவும் தோணிகளுக்கு உரிமையாளர்களாகவும் ஆங்கிலேயர் நிறுவனங்களில் முகவர்களாகவும் தரகர்களாகவும் விளங்கினர்" என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள்(2023).

கொற்கை நாவல் 1914 ஆம் ஆண்டு சாதித் தலைமையான பாண்டியாபதியின் இறப்பிலிருந்து தொடங்குகிறது நாவலில் ரிபோராக்கள், கர்டோசா, மோத்தா, தல்மொய்தா ஆகியோர் வளம் படைத்த மேசைக்காரர்களாக காட்டப்படுகின்றனர். இவர்கள் இலங்கையிலும் கொற்கையிலும் வணிக நிறுவனங்களின் உடமையாளராகவும் அரசியலில் பலம் பொருந்தியவர்களாகவும் விளங்கினர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் புதிய தொழில்துறைகள் பெருகின. ரயில் போக்குவரத்திற்காக நிலக்கரி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 1915 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து அதிக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. நூல் தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. இந்நிறுவனங்களின் பொறுப்பாளர்களாகவும் முகவர்களாகவும் உயர்பதவிகளிலும் மெனக்கெடார்கள் அமர்த்தபட்டனர். மேலும் உப்பு ஏற்றுமதி அதிகரித்ததன் காரணமாக உப்பளங்கள் உருவாகி உப்பு விளைவித்தலும், பெரும் தோணிகளுக்கு சொந்தக்காரர்களாகவும் விளங்கிய இவர்கள் வணிகர்களாகவும் அதே நேரத்தில் முதலாளிகளாகவும் உயர்ந்தனர். ஆகையால் பொருளாதாரத்தின் பல்வேறு நிலைகளிலும் மேசைக்காரர்களுக்கு போட்டியாகச் செயல்பட்டனர். இவர்களை அடுத்து கீழ் நிலையில் மீன்பிடித்தல், சங்கு மற்றும் முத்து குளித்தல், தோணிகளில் தண்டாலாகச் செல்லும் கம்மரக்காரர்கள் வைக்கப்பட்டனர்.

இப்படிநிலை பரதவர்களின் சமூகத்தில் பொதுவான சமூகப் படிநிலையாக இருப்பதை "பர்னாந்துமாருல மூணு வக கோட்டு சூட்டு போட்ட மேசைக்காரங்க படிச்சி வேலயளுக்கு போற மெனக்கெடமாரு இன்னும் தோணி, சங்குகுளி, மீன்பிடிக்கப் போற கம்மரக்காரங்க"(கொற்கை;2024, ப:45)

பொருளாதரத்தில் வளர்ச்சி அடைந்திருந்தாலும் மெனக்கெடார்கள் சமூகப் படிநிலையில் மேசைக்காரர்களுக்கு அடுத்த நிலையிலேயே வைத்து மதிக்கப்பட்டனர். இருப்பினும் சமூகத் தகுதியைப் பெறுவதற்காக மேசைக்காரர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்ள மெனக்கெடார்கள் விரும்பினர். ஆனால் மேசைக்காரர்கள் தங்களுக்குள்ளேயே திருமணவுறவு வைத்துக் கொள்ளும் அகமனக்குழுவாகத் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு பிற பிரிவினருக்கான வாய்ப்புகளை மறுத்தனர். இதனால் மேசைக்காரரான தல்மொய்தாவின் மகள் லிடியா திருமணம் ஆகாமல் கன்னிப் பெண்ணாகவே இறக்கும் நிலையை நாவலில் காணலாம். இத்தகைய

கதவடைப்பை மெனக்கெடார்களும் கம்மரக்காரர்களுக்கும் செய்தனர். ஏனெனில் முதல் இருப்பிரிவனரும் கம்மரக்காரர்களையும் அவர்களது தொழிலையும் இழிவானதாக கருதினார். ஆனால் தொழிற் வளர்ச்சியின் காரணமாக இம்மக்களிலும் தோணிகளைச் சொந்தமாக் கொண்ட சிறு முதலாளிகள் தோன்றினர்.இருப்பினும் இவர்களை முதலாளிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை.”நம்ம பத்துத் தோணி வச்சி தொழில் செஞ்சாலும் மேசைக்காரன்வ நம்ம பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டன்வ”(மேலது; ப:384).

ஆனால் காலகதியில் சாதித்தலைமைப் பதவி, வெள்ளையர்களின் சிவில் ஆட்சியாளும் முத்துக்குளித்தல் மீதான கட்டுப்பாடும் பின்னர் இத்தொழில் நிகழாததாலும் காணாமல் போனது. மேசைக்காரர்களும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து நலிந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் பொருளாதார ஆதாயத்தை கருத்தில் கொண்டு மெனக்கெடார்களுக்கு எதிராக வசதி படைத்த கம்மரக்காரர்கள் உடன் திருமணவுறவு வைத்துக் கொண்டாலும் தங்களது சமூகத் தகுதியை விட்டுக் கொடுக்கவில்லை.

ஆரம்பத்தில் பொருளாதார உற்பத்தியாலும் உபரியின் அதிகரிப்பாலும் வருவாய் ஒரு குழுவினரிடம் மட்டுமே குவிந்ததால் ஒரே சாதியினுள் வர்க்கப் பிரிவுகள் தோன்றின. இப்பிரிவுகள் அகமணம், ஒதுக்குதல் முதலிய கருத்தியல்களாலும் தங்களது சாதி நலனை பேணுவதற்காக சாதிச் சங்கங்களை உருவாக்கியதாலும் இறுக்கமான சாதிக் குழுக்களாக மாறின. விளிம்புநிலை மக்களாக இருந்த கம்மரக்காரர்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்த பின்னரும் அவர்களது பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றம் சமூகப் படிநிலையில் அதற்குரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இதுவே சாதிப் படிநிலையின் வலிமையை வெளிப்படுத்துகிறது.

இச்சாதிப் படிநிலையால் உருவான முரண்பாடு 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற மாதா திருவிழாவின் போது தேரை யார் இழுப்பது என்பது தொடர்பாக நிகழ்ந்த சம்பவத்திலும் வெளிப்படுகிறது. “அது என்னவே ஒரே சாதிக்குள்ளேயே இப்படி ஏத்தம் ஏறக்கம் பாக்குறது பொண்ணு குடுக்காத எடுக்காத ஏன்னா நாங்க ஏழை எளியதுவ இவுரு போற தெருவுல நாங்க போவக் கூடாதாம் இவுங்கள்வ வுடுவ இருக்க எடங்கள்வ கலியாண ஊர்வலங்க வரக்கூடாதாம் மையங்கள கோயிலுக்கு எடுத்திற்று போவக் கூடாதாம்”(மேலது;ப460). இவ்வுரையாடல் வரிகள் ஒரே சாதி மற்றும் மதத்தைச் சேர்ந்தவர்களிடையேயும் தீண்டாமை, ஒதுக்குதல் மற்றும் சமூக அடக்குமுறை போன்ற நடைமுறைகள் நிலவியத்தை வெளிப்படுத்துகின்றன. பொதுவான சாதியமைப்பில் எண்ணிக்கைச் சிறுபான்மை ஆதிக்கச் சாதிகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான அடித்த மக்களை ஒடுக்குவதற்கு பயன்படுத்திய மேற்கூறிய கருத்தியல்களையும் நடைமுறைகளையும் ஒரேச் சாதி பிரிவுனுள் உருவான உட்சாதிக்குழுக்களிடமும் மாறாமல் கடைபிடிக்கப்பட்டதே சாதியின் வெற்றியாகும்.

## முடிவுரை

பரதவர் சமூகத்தின் பொருளாதார அடித்தளம் கடலை மையமாகக் கொண்ட தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வளங்களின் மீதான கட்டுப்பாடும் அவற்றின் மூலம் உருவான

பொருளாதார வேறுபாடுகளும் அச்சமூகத்திற்குள் படிநிலைகளை உருவாக்கியுள்ளன. இதன் விளைவாக மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள், கம்மரக்காரர்கள் எனப் பொருளாதார மற்றும் சமூக நிலைகளின் அடிப்படையில் வேறுபட்ட பிரிவுகள் உருவாகியுள்ளன.

. கொற்கை நாவலின் பதிவுகளின் வழியாக நோக்கும் போது, பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் சமூகப் படிநிலையிலும் உடனடியான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. என்பது புலப்படுகிறது. மெனக்கெடார்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து மேசைக்காரர்களுக்குப் போட்டியாக உயர்ந்த போதிலும் அவர்களுக்குரிய சமூகத் தகுதி முழுமையாக வழங்கப்படவில்லை. அதே போல் கம்மரக்காரர்களிடையேயும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் சமூகப் படிநிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட கீழ்நிலை மாறவில்லை. மேலும் திருமணவுறவு, சமூக ஒதுக்கல், தொழில் சார்ந்த உயர்வு- தாழ்வு, தீண்டாமை போன்ற கருத்தியல்கள் பொருளாதார வேறுபாடுகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளமை நாவலின் பதிவுகளின் வழியாகத் தெளிவாகிறது. பொருளதார நிலை மாறிய பின்னரும் சமூகத் தகுதி மற்றும் சாதியப் படிநிலை தொடர்ந்திருப்பது, பொருளாதார வேறுபாடுகள் மட்டும் இப்பிரிவுகளின் தன்மையை விளக்கிவிட முடியாது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு கொற்கை நாவல் பரதவர் சமூகத்திற்குள் பொருளாதார வளங்களின் பகிர்வு, அதிகாரம், சமூகப் படிநிலை மற்றும் உட்சாதி முரண்பாடுகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகச் செயல்பட்ட விதத்தைப் பதிவு செய்கிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. ஆ.சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, ப.125
2. மேலது ப.126
3. மேலது ப.132
4. பக்தவத்சல பாரதி, அய்யாயிரம் ஆண்டுத் தமிழகம் பண்பாட்டு மானிடவியல் பார்வை, ப.85
5. ஜோ டி குரூஸ் , ஆழி சூழ் உலகு, ப.554
6. மேலது, ப.271
7. ஜோ டி குரூஸ் , கொற்கை, ப.1137
8. மேலது, ப.45
9. மேபது, ப. 384
10. மேலது, ப.460
11. சடெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், ப.4
12. மேலது, ப.15

## துணைநூற் பட்டியல் (References)

1. சிவசுப்பிரமணியன். ஆ. அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், நான்காம் பதிப்பு செப்டம்பர் 2023, சென்னை - 600 050
2. டெக்லா. ச. முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2012, சென்னை - 600 098
3. பக்தவத்சல பாரதி, அய்யாயிரம் ஆண்டு தமிழகம் பண்பாட்டு மானிடவியல் பார்வை, அடையாளம் பதிப்பகம் ,முதல் பதிப்பு 2025

4. ஜோ டி குருஸ் ஆர் .என், கொற்கை, காலச்சுவடு பதிப்பகம், பதினைந்தாம் பதிப்பு பிப்ரவரி 2024, நாகர்கோவில்.
5. ஜோ டி குருஸ் . ஆர் .என், ஆழி சூழ் உலகு தமிழினி, முதல் பதிப்பு நவம்பர் 2004.

© 2026 சுபா பா, முனைவர் . ஜென்ஸிஸ் குமார் மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..